STREET PLAY SCRIPTS
ON
PREVENTION & PROTECTION AGAINST FLOURIDE

T. Ilanchezhian

Collaborating Agencies

District Rural Development Agency
Social Welfare Department
TINP
Education Department
Health Department
Arivoli Iyakkam
Erode District
&
UNICEF
Chennai

State Resource Centre For Non-Formal Education
Tamil Nadu Board of Continuing Education
No. 1, First Street, Venkatratnam Nagar, Extn., Adyar, Chennai-600 020.

STREET PLAY SCRIPTS
ON
PREVENTION & PROTECTION AGAINST FLOURIDE

அன்பளிப்பு
முனைவர் ம. இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

T.Ilanchezhian

Collaborating Agencies

District Rural Development Agency
Social Welfare Department
TINP
Education Department
Health Department
Arivoli Iyakkam
&
UNICEF

STATE RESOURCE CENTRE FOR NON-FORMAL EDUCATION
TAMIL NADU BOARD OF CONTINUING EDUCATION
No.1, First Street, Venkatratnam Nagar Extn., Adyar, Chennai - 600 020

முன்னுரை

தமிழ் நாடு தொடர்கல்வி வாரியம் மற்றும் மாநில பள்ளிசாராக் கல்விக் கருவூலத்தின் மூலமாக ஈரோடு மாவட்டத்தில் அறிவொளி இயக்கச்செயல்பாடுகளை வளர்கல்வித் திட்டங்களுடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்திட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதன் அடிப்படையில், யுனிசெஃப் ஒத்துழைப்புடன் பள்ளிசுகாதாரத் திட்டத்தினை அறிவொளி இயக்கச்சொயல்பாடுகளுடன் ஒருங்கிணைத்து, ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆரம்பப்பள்ளிகளிலும், நடுநிலைப்பள்ளிகளிலும் தன்சுத்தம் மற்றும் பள்ளி சுகாதாரம் குறித்த வீதி நாடக கலைப்பயண நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றோம்.

தற்போது கிராம மக்களிடையே சத்துணவின் அவசியம் குறித்த கருத்துக்களை எடுத்துக் கூறவும், ஃப்ளோரைடு பாதிப்பு, ஃப்ளோரசிஸ் நோய் வராமல் தடுக்க வழிமுறைகள் குறித்த கருத்துக்களை விளம்பரப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். இதற்கு ஏற்ப தற்போது வீதிநாடக கருத்துவடிவங்கள் மற்றும் பாடல்கள் தயாரிப்புச் செயலரங்கினை 12.8.99 முதல் 16.8.99 வரை யுனிசெஃப் நிதிஉதவியுடன் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பல்வேறு வளர்ச்சித்துறை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடத்தினோம்.

செயலரங்கின் எழுத்தாளர்களும் துறை வல்லுநர்களும் தயாரித்த வீதிநாடக கருத்து வடிவப் புத்தகத்தினைத் தொகுத்து வெளியிடுவதில் பெருமையடைகின்றோம்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஆலோசனை வழங்குவதுடன், மிகுந்த ஈடுபாடுடன் பணியாற்றிவரும் யுனிசெஃப் நிறுவன திட்ட அலுவலர் திருமதி.ஜெயா கோகிலாமணி அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி.

இத்திட்டத்தினையும் மற்றும் பிற தொடர்புடைய செயல்பாடுகளையும் மேற்கொள்ள முழு ஆதரவு வழங்கிவரும் ஈரோடு மாவட்ட கூடுதல் ஆட்சித் தலைவர் திருமதி.பி.அமுதா அவர்களுக்கும் எங்களது நன்றி.

சிறப்புத் திட்டங்களை முன்வந்து பொறுப்பு ஏற்று நடத்தி வரும் மாநில பள்ளிசாராக் கல்விக் கருவூல இணைத்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.மஇளஞ்செழியன் அவர்களுக்கு பாராட்டுதல்கள்.

இக்கருத்துப் புத்தகத்தினைப் பயன்படுத்தப் போகின்ற உங்களுக்கு எங்களது வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
ஜான் ஏ. ஜோசப்
இயக்குநர்

செப்டம்பர் 99
சென்னை - 20

பொருளடக்கம்

வீதி நாடகக்கருத்து வடிவம்

வ.எண்	தலைப்பு	கருத்து	எழுதியவர்
1	கௌவல் காவிப் பிசாசு	ஃபுளோரைடு	ஞானசூரியன்
2	பொண்ணு பார்த்தாச்சு	ஃபுளோரைடு	முனைவர் வெ.மு.ஷாஜகான்கனி
3	நவீன வேதாளம்	ஃபுளோரைடு	முனைவர் வெ.மு.ஷாஜகான்கனி
4	நல்ல காலம் பொறக்குது	ஃபுளோரைடு	ஞானசூரியன்

1. கூனல் காவிப் பிசாசு

வெ.மு.ஷாஜகான் கனி

(அடிகுழாய் போல ஒருவர் நிற்கிறார். முகமூடியும், உடையும் காவி நிறத்தில் அணிந்த ஒரு நபர் பிசாசு, கூன்விழுந்து அந்த அடிகுழாயைச் சுற்றிச் சுற்றி வந்து ஆடுகிறது)

பிசாசு : தையத் தையத் தையா தையா - தக்கத்
தையத் தையத் தையா தையா
தையத் தையத் தையா தையா - தக்கத்
தையத் தையத் தையா தையா. . .
(பார்வையாளர் பக்கமிருந்து ஒரு ஆண் வாத்தியார் (நமது நடிகர்) எழுந்து. .)

வாத்தி : இந்தாப்பா! நானும் அப்ப இருந்து பார்க்குறேன். சும்மா, அடிகுழாயைச் சுத்தி சுத்தி வந்து, தையாத் தையான்னு குதிக்கிறே! இதையே பார்த்துக்கிட்டு இருக்கனுமா நாங்க?

பிசாசு : நான் குதிக்கிறதை நீ பார்த்துட்டியா? (இப்போது பார்வையாளர் பக்கமிருந்து - ஒரு பெண் - போலீஸ்காரம்மா (நமது நடிகை) எழுந்து. . .)

போலீஸ் : யோவ்! பார்த்துட்டு சகிக்க முடியாமத்தானே கேட்கிறோம்! அப்புறம் என்ன, பார்த்துட்டியான்னு கேட்குறே?

பிசாசு : அடடே! உன் கண்ணுக்கும் நான் தெரியுறேனா?

வாத்தி : ஏய். . . கிண்டலா பண்றே?

போலீஸ் : எங்களுக்குக் கண்ணு தெரியாதுங்கிறியா?

பிசாசு : அதில்லேங்க. நான் குடியிருக்கிற மஞ்சப்பட்டிக் கிராமத்தில இதுவரைக்கும் என்னை யாரும் கண்டுக்-கிட்டதே இல்லை. உங்க கண்ணுக்கு மட்டும் நான் தெரிஞ்சிருக்கேன்! அதான், ஆச்சர்யமாக் கேட்டேன். ஆமா, இங்க வாங்க. நீங்க யாரு?

வாத்தி : (பிசாசை நெருங்கி) நான் பள்ளிக்கூட வாத்தியாரு!

பிசாசு : ஓகோ! நீங்க. . .

போலீஸ் : (பிசாசை நெருங்கி) இங்கே காவலுக்கு வந்திருக்கிற பெண் போலீஸ்! ஆமா, நீ யாரு?

வாத்தி : உன் பேரு என்ன?

பிசாசு : (சிரித்தல்) ஹஹ்ஹா. . .

போலீஸ் : என்ன சிரிக்கிறே. உம் பேரைச் சொல்லு. முட்டிக்கு முட்டி தட்டிடுவேன்!

வாத்தி : நீ யாரு? யாருன்னு சொல்லுய்யா!

பிசாசு : நான் யாருன்னு சொன்னா, உங்களுக்குப் புரியாது!

வாத்தி : நான் வாத்தியாரு, எனக்கே புரியாதா?

போலீஸ் : உம் பேரைச் சொல்லுமேன்!

பிசாசு : மேனா? நான் மேன் இல்லே, ப்ளோரைடு! (வாத்தியும் போலீசும் ஒருவரையொருவர் பார்த்தல்)

வாத்தி : புளோரைடா. . . அப்படின்னா?

போலீஸ் : ஒன்னும் புரியல்லியே. . .

பிசாசு : நான் சொல்லல்லே, உங்களுக்குப் புரியாதுன்னு.

வாத்தி : கொஞ்சம் புரியும்படியாச் சொல்லுப்பா!

போலீஸ் : உன் வீடு எது? எங்கே குடியிருக்கே?

பிசாசு : இந்த ஊருக்கிணத்துல! இந்த அடிகுழாய்த் தண்ணில!

வாத்தி : தண்ணியிலா? இவன் என்ன, தவளை, நண்டுப் பரம்பரையா இருப்பானோ?

போலீஸ் : உடம்பெல்லாம் காவிக்கறையா இருக்கு. யார் இவன்?

பிசாசு : இந்த மஞ்சம்பட்டி கிராமத்துக்காரங்க எனக்கு ஒருபேரு வச்சிருக்காங்க! அதைச் சொன்னா உங்களுக்கு புரியுமா?

வாத்தி : சொல்லு?

போலீஸ் : என்ன பேரு?

பிசாசு : சொல்லிடுவேன். . .

வாத்தி : அட, சொல்லித் தொலைய்யா!

பிசாசு : நான், நான் தான். . . கூனல்காவிப் பிசாசு!

வாத்தி : ஆ. . . பிசாசா ? !

போலீஸ் : பிச்சா. . . பிச்சா. . . பிச்சாச்சா!
(இருவரும் ஓடிப் பார்வையாளர்கள் பக்கம் பழைய இடத்தில் போய் அமர்தல்)

பிசாசு : என்னங்க, என்னங்க. ஓடிப்போயிட்டீங்க! ஏதோ பேச்சுத் துணையா இருப்பீங்களேன்னு பார்த்தா. . . போயிட்டீங்களே! உங்க கண்ணுக்காவது நான் தெரிஞ்சேன். எங்க மஞ்சப்பட்டி கிராமத்து ஜனங்களுக்கு நான் பாடுறதும் ஆடுறதும் தெரியாது. பேசினாலும் கேட்காது. இப்பப் பாருங்களேன். . .

(ஒரு இளம்பெண், பல்லில் காவி நிறம். குடத்துடன் வருகிறாள். அடிகுழாயில் தண்ணீர் அடிக்கிறாள். பிசாசு குடத்திற்கு அருகில் போய் நின்று பாடி ஆடுகிறது. .)

பிசாசு : (தொகையறா)
படிக்கிறது ராமாயணம்
இடிக்கிறது பெருமாள் கோயிலா. . ?
புடிக்கிறது குடிதண்ணீ. இங்கே
மலஜலங்க பக்கத்திலா. . ?
(பாட்டு)
தில்லாலங்கடி தில்லாலங்கடி ஆட்டம் ஆடுவேன்-ஜோரா
பாட்டுப் பாடுவேன் - லேசா ஓட்டம் ஓடுவேன்
குடியிருக்கிறேன் குடியிருக்கிறேன் உங்க ஊரிலே -
நிலையா
உங்க தெருவிலே நிதமும் உங்க கிணத்திலே!

பல்லுக்குமேலே காவிபுடிச்சு. . . ஏ. . . ஏ. . .
பல்லுக்குமேலே காவிபுடிச்சு, வேட்டையாடுவேன் -
பல்லுக் கூட்டையாடுவேன் - சொத்தையா
ஓட்டை போடுவேன்!
(ஹேய் தில்லாலலங்கடி, ஹேய் தில்லாலங்கடி . .)

முதுகுவலி இடுப்புவலி மூட்டுவலிக்குமே - எலும்பு
கூட்டு வலிக்குமே - கூனல் போட்டு வலிக்குமே!
எளவட்டத்தை கிழவனாக்கி. . . ஏ. . . ஏ. . .
எளவட்டப்பயலை கிழவனாக்கி, ஒடுங்கிட வைப்பேன்-
கை காலு நடுங்கிட வைப்பேன் - முடிவா முடங்கிட
வைப்பேன்!
(ஹேய் தில்லாலங்கடி ஹேய் தில்லாலங்கடி. .)

அஜக்தா! அஜக்தா!
அஜக் அஜக் அஜக் அஜக்தா!
(பிசாசு ஆடி முடிக்கும்போது மலையப்பன் கூனல் விழுந்த முதுகுடன் தள்ளாடி நடந்து வருகிறார்)

மலையப்பன்: யம்ம, யம்மா! கொல்லைக்கு இருந்துட்டு எழுந்திருக்க முடியல்லே. மூட்டுக்கு மூட்டு வலிக்குது! ஏம்மா சாந்தி, வைத்தியரு வந்துட்டுப் போயிட்டாரா?

சாந்தி : இன்னும் வரலேப்பா!

மலை : அடிக்கடி தாகமா இருக்கு. எவ்வளவு தண்ணி குடிச்சாலும் தாகம் தீரமாட்டேன்குதே!

பிசாசு : நான் இருக்கிற வரைக்கும் தாகம் தீராது!
(மலையப்பன் மெல்ல நகர்ந்து, அடிபைப்பில் சாந்தி அடிக்க தண்ணீரை நிறைய நிறைய குடித்து நிமிர்கிறார்)

மலை : யப்பா, யப்பா! இடுப்பு நிமிர முடியலியே! இம்புட்டுத் தண்ணி குடிக்கிறேன். ஆனா, ஒண்ணுக்குப் போனா, இத்துனூண்டுதான் வருது! கஞ்சித் தண்ணி குடிச்சா கலமூத்திரம்னு பழமொழி சொல்லுவாக. எல்லாம் பொய்யாப் போச்சு! ஹூம், புகையிலைப் போடுவோம். . .
(மடியிலிருந்து புகையிலை எடுத்து வாயில் திணிக்க)

பிசாசு : நீ புகையிலைப் போடு. உன் மக, பாக்குத் தின்னட்டும். எனக்குக் கொண்டாட்டம் தான்!
(சாந்தி முந்தானையை அவிழ்த்துப் பாக்கை வாயில் போடுதல்)

மலை : ஏ பயப்புள்ளே! பல்லை ஒழுங்கா விளக்குறியா என்ன? மஞ்சக்காவி மாறலியே?

சாந்தி : டவுனிலே மருந்து போட்ட பேஸ்ட் வாங்கியாந்து, தினமும் ரெண்டு தடவை பல்லு விளக்குறேன்பா!

பிசாசு : ஓகோ. . . புளோரைடு பேஸ்ட்டா! நல்லா விளங்கினாப்பல தான்.!

மலை : உன்னைப் பொண்ணு பார்க்க வர்ரவனெல்லாம் உன் பல்லத்தானே நொட்டனை சொல்றான்! உனக்கு என்னைக்கு கல்யாணம் பண்ணி, கண்குளிரப் பார்க்கப் போறேனோ. . .

சாந்தி : அப்பா! வைத்தியரு வாராருப்பா! (மருந்துப் பையுடன் வைத்தியர் தளர்ந்து தள்ளாடி நடந்து வருகிறார். . .)

வைத்தி : என்ன மலையப்பா, சௌக்கியமா?

மலை : ஹூம். நம்ம ஊரை கூனல்காவிப் பிசாசு பிடிச்சதில் இருந்து சௌக்கியம் போயிடுச்சே!

வைத்தி : வாஸ்தவம், வாஸ்தவம், (பக்கத்து வீட்டுப் பொன்னம்மா இடுப்பைப் பிடித்தபடி அங்கே வருகிறாள். .)

பொன் : ஆத்தேய்! இடுப்புவலி உசிரு போகுதே! வைத்தியரய்யா! இம்புட்டு நேரமா எங்கே சுத்திட்டு வாரீக?

வைத்தி : சுத்திட்டு வாரேனா? ஏன் கேட்கமாட்டீக? நீங்க எல்லாரும் என்வீடு தேடி வரணும். உங்க யாருக்கும் நடக்க முடியலியேன்னு பால்காரன் வீடுவீடாப் போயி பாலு ஊத்தற மாதிரி, நான் உங்க வீடுவீடா வந்து மருந்து ஊத்துறேன்ல! இதுவும் கேப்பீக, இன்னமும் கேப்பீக! ம். . . யம்மா. . . (வைத்தியர் மூட்டைப் பிடித்தபடி வேதனையில் முனங்க)

மலை : என்ன வைத்தியரய்யா, நீங்களும் முக்குறீங்க, முனங்குறீங்க?

வைத்தி : ஹூம். எனக்கும் மூட்டுவலி தான்!

பிசாசு : (சிரித்து மகிழ்ந்து) ஹேய். . .ஹேய். . . பைத்தியத்துக்கு வைத்தியம் பார்க்கிற வைத்தியர்க்கே பைத்தியம் பிடிச்சா, பைத்தியம் பிடிச்ச வைத்தியர்க்கு வைத்தியம் பார்க்கிறது யாரு. . .?

பொன் : சரிதான் போங்க. உடுத்து மாத்துக்குப் புடவை வாங்கிட்டு வரலாம்னு, உடம்பிலே ஓலைப்பாயைக் கட்டிக்கிட்டு உறவுக்காரி வீட்டுக்குப் போனா. . . அவ, ஈச்சம்பாயைக் கட்டிக்கிட்டு எதுக்கே வந்தாளாம்! அந்தக் கதையாவுல இருக்கு!

வைத்தி : வர, வர நம்ம ஊரு ஜனங்களுக்கு என்மேல நம்பிக்கை குறைஞ்சு போச்சு! போன பஞ்சாயத்துக் கூட்டத்தில வைத்தியரை இனிமே நம்ப முடியாது, மாந்திரீகனை ஏற்பாடு பண்ணணும்னு நாட்டாமை தீர்மானம் போட்டுட்டாரே!

மலை : நீங்களும் மருந்து கொடுத்துத்தான் பார்க்குறீங்க! நோயி தீர்ந்தபாடில்லையே? இதுநோய் இல்லே, பேயி! பேய்க்கு மாந்திரீகனைத்தானே பார்க்கணும்?

வைத்தி : மாந்திரீகனைப் பார்த்துட்டாகளா?

மலை : பார்த்துட்டே இருக்காக!

(இப்போது தவசி கை கால் உதறலாக ஆட ஒரு கிழவனைப்போல ஆடி வருகிறான். ஒரு பொட்டலத்தை அவிழ்த்து வாயில போடுதல்)

வைத்தி : டே தவசி! என்னடா அது?

தவசி : இதுதான் பான்பராக்! இதை வாயில போட்டு ஒரு சிகரெட்டைப் பத்த வச்சா, அட அட அடா. . .

மலை : இவன் கிட்டே கேட்டாத் தெரியுமே. . . ஏன்டா தவசி, நாட்டாமை ஐயா மாந்திரிகனைப் பார்க்கனும்னாகளே, பார்த்துட்டாகளா?

தவசி : அங்கே தான் போய்க்கிட்டிருக்கேன். வரட்டுமா. . .? (தள்ளாடி தள்ளாடி போகிறான்)

வைத்தி : இவனுக்கு 25 வயசுகூட ஆகல்லே, பார்த்தா 50 வயசு மாதிரி ஆயிட்டான்.

மலை : எல்லாம் அந்த கூனல்காவிப் பிசாசோட வேலை!

பிசாசு : (சிரித்தல்) ஹஹ்ஹா. . .

சாந்தி : அதோ நாட்டாமை ஐயா வாராக!

பொன் : கூட வர்ரது யாரு. . .?

சாந்தி : தவசி தான்!

பொன் : அட, மூனாவதா ஒரு ஆளு வாராரு பாரு.

மலை : ஆமா. . . புதுசாத் தெரியுதே! மாந்திரீகனா இருப்பானோ

பிசாசு : (அதிர்ந்து) ஆ! மாந்திரீகனா?

வைத்தி : ம்ஹூம். கையில வேப்பிலை, மந்திரக்கோல்னு எதுவும் இல்லியே! ஏதோ கண்ணாடிக் குடுவை, பாட்டல்னு என்னமோ வச்சிருக்காரு! அது மாந்திரீகனாத் தெரியல்லே. . .

(நாட்டாமை, தவசி, மாந்திரீகன் மூவரும் வர. . . பிசாசு மெல்ல நகர்ந்து அடிகுழாயின் பின்புறம் போய் நிற்க. . . மாந்திரீகன் தோளில் ஒரு பை தொங்குகிறது. அதில் எலுமிச்சை, கீரை முதலியன உள்ளன)

மலை : வாங்க நாட்டாமை ஐயா!

நாட்டாமை : மலையப்பா! நம்மைப் பிடிச்ச சனியன் இன்னியோட ஒழிஞ்சது. இதோ பெரிய மாந்திரீகன் வந்துட்டாரு!

வைத்தி : இவரா மாந்திரீகன்? இவரைப் பார்த்தா அப்படித் தெரியலியே!

நாட்டாமை : வேற எப்படித் தெரியுது?

வைத்தி : இங்கிலீஷ் துரை மாதிரித் தெரியுது?

மாந்திரீகன் : யெஸ்! நான் இங்கிலீஷ் மாந்திரீகன். விஞ்ஞான மாந்திரீகன்.

தவசி : மலையாள மாந்திரீகன் எல்லாம் இவர்கிட்ட பிச்சை வாங்கனும்.

மலை : அப்போ. . . துட்டு எக்கச்சக்கமா கேட்பாரோ?

நாட் : அதுதான் இல்ல! ஒரு பைசாகூட வாங்காம ஒரு சமூக சேவையா நம்ம ஊரைப் பிடிச்ச பிசாசை விரட்டப் போறாரு!

பிசாசு : கிழிச்சாரு! !

மாந்தி : இப்ப கிழிச்சாருன்னு சொன்னது யாரு?

நாட் : யாரும் சொல்லலீயே! (பிசாசு குழாய்க்குப் பின் ஒளிந்து கொள்ளுதல்)

மாந்தி : இல்லே, இப்ப ஒரு குரல் கேட்டதே. . .?

வைத்தி : எங்க யாருக்கும் கேட்கலியே!

மலை : சேவை செய்ய வந்திருக்கீங்க. உங்களை அப்படிச் சொல்வோமா?

தவசி : ஒருவேளை அந்தப் பிசாசு சொல்லிருக்குமா?

பொன் : இருக்கும். பிசாசு பேசுறது மந்திரவாதிக்கு மட்டும் கேட்டிருக்கும்!

மாந்தி : அந்தப் பிசாசோட பேரு என்னன்னு சொன்னீங்க?

நாட் : கூனல்காவிப் பிசாசு!

மலை : என் முதுகைப் பாருங்க. 40 வயசிலேயே கூனல் விழுந்து கிழவனாயிட்டேன். எல்லாம் அந்தப் பிசாசோட வேலை!

வைத்தி : இந்த ஊரிலே எல்லார் பல்லும் காவிக்கறை பிடிச்சிருக்கும்!

பொன் : இதுவும் அந்தப் பிசாசோட வேலை தான்!

மாந்தி : அப்படியா! எங்கே எல்லோரும் உங்க பல்லைக் காட்டுங்க?
(ஈ. . . என்று எல்லாரும் பற்களைக் காட்ட. . . எல்லார் பற்களும் பழுப்பு கலந்த காவி நிறமாத் தெரிதல்)

மலை : பல்லெல்லாம் காவி ஏறிப் போனதாலே எங்க ஊருப் பொண்ணுகளை எவனும் கட்டவர மாட்டேன்கிறான்.

தவசி : கை கால் எல்லாம் கிடுகிடுன்னு நடுங்குதுன்னு என்ன மாதிரி எளவட்டங்களுக்கு அசலூரிலே பொண்ணு தரமாட்டேன்கிறாங்க!

நாட் : இந்தப் பிசாசாலே, எங்க ஊரில பலபேருக்கு இடுப்பு வலி, முதுகுவலி மூட்டுவலி!

பொன் : எனக்குக் குனிஞ்சா நிமிர முடியலை, நிமிர்ந்தா குனிய முடியலை!

சாந்தி : சுறுசுறுப்பா ஓடியாடி வேலை பார்க்க முடியல்லே. நடுக்கமும் சோர்வுமா வருது!

மலை : ஒரே தாகம்! எம்புட்டுத் தண்ணி குடிச்சாலும் தாகம் தீர்ரது இல்லே.

நாட் : அய்! பிசாசு - பாலு , கீரைகளுக்கு எல்லாம் பயப்படுதே!

பொன் : அதானே!

மாந்தி : ஆமாம்! நீங்க பாலு, கீரை, நெல்லிக்கா, எலுமிச்சை தக்காளி, முட்டைகோஸ் சாப்பிட்டு வந்திருந்தா, இந்த பிசாசு உங்களை இவ்வளவு பாடுபடுத்தியிருக்காது!

மலை : இந்த விஷயம் எங்களுக்குத் தெரியாமப் போச்சே!

சாந்தி : இப்ப, இன்னையிலிருந்து அதெல்லாம் சாப்பிட்டா, எங்க குறையெல்லாம் தீர்ந்துவிடுமா?

மாந்தி : தீராது! அதெல்லாம் வருமுன் காக்கும். வந்தபின் காக்காது!

நாட் : அப்ப, இந்தக் கஷ்டத்திலிருந்து விடிவுதான் என்ன? சொல்லுங்க?

மாந்தி : ஒரே வழி தான்! பிசாசு இருக்கிற இந்தத் தண்ணியை இனிமே நீங்க குடிக்கக் கூடாது!
(பிசாசு மிரண்டு கவனிக்கிறது)

மலை : என்ன?! தாகத்துக்கு நாங்க தண்ணியே குடிக்கக் கூடாதா? இந்தத் தண்ணில நாங்க சமையல் செய்து சாப்பிடக் கூடாதா?

வைத்தி : இந்தத் தண்ணிலே நாங்க குளிக்கவும் கூடாதா?

சாந்தி : பாத்திரம் பண்டங்களைக் கழுவவும் கூடாதா?

தவசி : காலு, முகம் கழுவக் கூடாதா?

நாட் : காய்கறித் தோட்டத்துக்கும் இந்தத் தண்ணியைப் பாய்ச்சக் கூடாதா?

மாந்தி : உங்க எல்லார் கேள்விக்கும் ஒரே பதில். பிசாசு பிடிச்ச இந்தத் தண்ணில நீங்க குளிக்கலாம், துவைக்கலாம், பாத்திரம் கழுவலாம், கால், முகம் கழுவலாம், தோட்டத்துக்கு பாய்ச்சி அதில விளையிற காய்கறிகளைச் சாப்பிடலாம். ஆனா, குடிநீராவும், சமையலுக்கும் பயன்படுத்தக் கூடாது.

மலை : ஐயா மந்திரவாதி! உங்களாலே இந்த பிசாசை விரட்டவே முடியாதா?

மாந்தி : விரட்ட முடியும்! தற்காலிகமா. . .

நாட் : முதல்ல அந்தப் பிசாசை அடிச்சுக் கொல்லுங்க!

தவசி : ஆமா, கொல்லுங்க!

மாந்தி : இப்பப் பாருங்க. . . (பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து பிசாசு மேல் தூவ, பிசாசு தொண்டையைப் பிடித்துக் கொண்டு கதறித் துடிக்கிறது)

பிசாசு : ஆ. . .ஐயோ. . .எரியுதே. . .ஆ. . . அம்மா. . .
(செத்து விழுதல்)

பொன் : அப்பா. . . பிசாசு காலை விறைச்சுடுச்சு!

சாந்தி : ஆமா. . . பிசாசு செத்தே போச்சு!

தவசி : மறுபடியும் பிழைச்சு வந்திடாதே!

மாந்தி : ஆமா, பிசாசு செத்துப் போச்சு! ஆனா, புதுசா ஊறுற தண்ணியில பிசாசு மறுபடியும் வரும்!

மலை : இந்தத் தண்ணியைக் கொதிக்க வச்சா, பிசாசு சாகாதா?

மாந்தி : கொதிக்க வைச்ச, கிருமிகள் தான் சாகும், இந்தப் பிசாசு சாகாது!

நாட் : அப்போ எங்களுக்கு என்னதான் வழி?

மாந்தி : ஒரே வழி. . . வேற இடத்தில குழாய்க் கிணறு தோண்டனும். மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் தயாரா இருக்கு! இதுக்கு உடனே நான் ஏற்பாடு பண்றேன். வரட்டுமா?
(அவர் போக முற்பட, ஆரம்பத்தில் வந்த வாத்தியாரும் பெண் போலீசும் பார்வையாளர் பக்கம் எழுந்து நின்று)

வாத்தி : ஐயா! கொஞ்சம் நில்லுங்க. நீங்க நிஜமாவே மந்திரவாதியா?

போலீஸ் : அது நிஜமாவே கூனல்காவிப் பிசாசா?

மாந்தி : இல்லே. நான் மந்திரவாதி இல்லே. அது பிசாசும் இல்லே. நான் இந்தப் பகுதியின் குடிநீர் வடிகால் வாரிய ஊழியன். இந்த மஞ்சப்பட்டி கிராமத்துக் குடி நீரிலே புளோரைடு என்கிற தனிமம் கலந்திருக்குனு எங்களுக்கு சந்தேகம் வந்தது. பல்லுல காவிக்கறை படியுறது. மூட்டுவலி, இடுப்புவலி வர்றது. இளமையில் முதுகு வளைஞ்சு கை, காலு ஆடிப்போய்க் கிழத் தோற்றம் அடைவது முதலான அடையாளங்கள் அதை உறுதிப்படுத்திச்சு!

வாத்தி : அது பிசாசோட வேலை இல்லையா?

மாந்தி : இல்லே, பிசாசோட வேலைன்னு கிராமத்து ஜனங்க மூடநம்பிக்கையா நினைச்சாங்க. அது தப்பு. மண்ணின் ஆழத்தில சில இடங்கள்ல புளோரைடு என்கிற உப்பு இருக்கு. இயற்கையாவே அது இருக்கு. அந்த புளோரைடு உப்பு கலந்த தண்ணியைக் குடிக்கிறதால வர்ற கோளாறு தான் இதெல்லாம்.

போலீஸ் : எங்க ஊர்த் தண்ணீரிலும் புளோரைடு இருக்குமா?

மாந்தி : இருக்கலாம். நீங்க பரிசோதிச்சுப் பார்க்கணும். எங்க குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து கிராமம் கிராமமா பரிசோதிக்க வருவாங்க. அவங்ககிட்டே உங்க ஊர்க் குடிநீரைப் பரிசோதிங்க. புளோரைடு இருந்தா மாற்று ஏற்பாடு உடனே செய்திடுங்க. வாழ்க! வளம் பெறுக!

(ஒரு பாடலுடன் நாடகத்தை முடிக்கலாம்)

++++++++++======++++++++++

2. பொண்ணுப் பார்த்தாச்சு !

வெ.மு.ஷாஜகான் கனி

காட்சி - 1

(பெண்ணின் அப்பா இடுப்பைப் பிடித்தபடி இடுப்பு வலியில் வேதனைப்பட, பெண்ணின் அம்மா கூனல் விழுந்து முழங்கால் முட்டியைப் பிடித்தபடி, குனிந்து நின்று கொண்டிருக்க, அவர்கள் மகளைப் பொண்ணு பார்க்க வருகிறார்கள் (அப்பா, அம்மா, மகன் (மணமகன்), புரோக்கர். . .)

பெ.அப்பா: வாங்க, வாங்க. (வேதனையில்) அம்மா. . .

பெ.அம்மா: உட்காருங்க (வலியில்) ஆ. . .

புரோக்கர் : இந்தத் தம்பி தான் மாப்பிள்ளே! வாத்யாரா இருக்காரு. தங்கமான குணம். இவரு. . . மாப்பிள்ளையின் அப்பா! கொஞ்சம் பயந்த சுபாவம்! இவங்க தான் மாப்பிள்ளையின் அம்மா. இவங்க தான் எல்லாம், (இவர்கள் பக்கம் திரும்பி) இவங்க தான் பொண்ணோட அம்மா, அப்பா!

அம்மா : புரியுது, புரியுது!

பெ.அம்மா: உட்காருங்க (வலியில்) . . .(முக்கல் தொனியில்) ருங்க. . .

அப்பா : இருக்கட்டும், இருக்கட்டும்.

பெ.அப்பா: நட்டம நின்னக்கிட்டா பொண்ணு பார்ப்பீங்க? (வலியில்) . . . (முக்கல் தொனியில்) ருங்க. . .

அம்மா : எங்க ஊரு வழக்கம் அப்படித்தான்! பொண்ணைப் பார்த்து, பிடிச்சதுன்னாத்தான் உட்கார்ந்து கையை நனைப்போம்!

அப்பா : ஆமா, ஆமா.

புரோக்கர் : இவங்க இந்த ஊரில ரொம்ப வலிமையான குடும்பம்.

அம்மா : (பெண் அம்மாவிடம்) நீங்க ஏன் மூட்டப் புடிச்சபடி குனிஞ்சுக்கிட்டே நிற்கறீங்க?

பெ.அம்மா: நிமிர முடியல்லே. . . மூட்டுவலி!

அப்பா : (பெண் அப்பாவிடம்) நானும் அப்பவே கேட்கணும்னு நினைச்சேன். நீங்க ஏன் இடுப்பிலேயே கையை வச்சுட்டிருக்கீங்க?

பெ.அப்பா: எடுத்தா, செத்தேன்! இடுப்பு வலி!

மகன் : சரிதான், ரொம்ப வலியான குடும்பம்.

புரோக்கர் : பொண்ணைக் கூட்டியாங்க. (பெண்ணின் அப்பாவும், அம்மாவும் உள்ளே செல்லுதல்)

(3)

அம்மா : புரோக்கர் ஐயா! இந்தக் கிராமம் நாலு தலைமுறைக்கு முன்னே எங்க பூர்வீகக் கிராமம். பழைய சொந்தபந்தம் விட்டுப் போனதுல என் பையனுக்கு ரொம்ப வருத்தம். அதனாலதான் இந்த ஊர்ல பொண்ணு பார்க்கணும்னு பிடிவாதமாச் சொல்லிப்புட்டான்.

புரோக்கர் : புரியுது. புரியுது. இந்த ஊரில இன்னிக்கு ரெண்டு பொண்ணைப் பார்க்கிறதா ஏற்பாடு. இந்த ரெண்டுல ஒன்னு கட்டாயம் முடியும் பாருங்களேன்.

மகன் : பொண்ணு வருது! பொண்ணு வருது!

அம்மா : ஏன்டா பறக்குறே?

புரோக்கர் : மாப்பிள்ளைக்கு அவசரம்!
(பெண் வந்து நிற்கிறாள்)

அம்மா : பொண்ணு லட்சணமா இருக்கா! (கணவனிடம்) என்னங்க?

அப்பா : நீ பொண்ணு லட்சணம்னு சொல்லிட்டா, பிறகு என்ன? பட்சணம் பரிமாறச் சொல்லிடலாம்.

அம்மா : இருங்க, பையன்கிட்டே ஒருவார்த்தை கேட்க வேணாம்? என்னடா சொல்றே?

மகன் : உனக்குப் பிடிச்சாச் சரிதான்ம்மா!

புரோக்கர்: : இதுதான்! இதுதான்! 100க்கு 90 மாப்பிள்ளைங்க எனக்குப் பொண்ணு பிடிச்சிட்டதுனு சொல்ற ஸ்டைல் இதுதான். பொண்ணுக்கு நேரா நின்னு பிடிச்சிருச்சுன்னு சொல்லக் கூடாதாம். அப்படி ஒரு பிகு!

(புரோக்கர் பேச்சின் நகைச்சுவையில் எல்லோரும் சிரிக்கிறார்கள். அப்போது பெண்ணின் பற்கள் காவி மஞ்சளாகத் தெரிவதை அம்மா கவனித்துவிடுகிறாள்)

பெ.அப்பா : அப்போ. . . தட்டை மாத்திக்கலாமா?

அம்மா : தட்டை மாத்தறதா? பல்லையே மாத்தணும்!

புரோக்கர் : நீங்க என்ன சொல்றீங்க?

அம்மா : பொண்ணுக்குப் பல்லு எல்லாம் ஒரே கறுப்பா இருக்கே!

அப்பா : அது கறுப்பு இல்லே! காவி!

பெ.அப்பா: சேச்சே! அது காவி இல்லேங்க, பழுப்பு நிறம்.

பெ.அம்மா: கொஞ்சம் மஞ்சளா இருக்கு. அவ்வளவு தான்!

புரோக்கர் : ஆமா, மஞ்சள்! மஞ்சள்! மஞ்சள் மகிமை! மங்களகரமான நிறம்.

அம்மா : அது மஞ்சள் இல்லே. கறுப்பு!

அப்பா : அது கறுப்பு இல்லை, காவி!

அம்மா : கறுப்புன்னு நான் சொல்றேன்ல?

அப்பா : (வாயைப் பொத்தி) அப்போ அது கறுப்புதான்.

மகன் : அது கறுப்பா, காவியான்னு பட்டிமன்றம் நடத்திட்டு மெதுவா வாங்க, நான் வாரேன். (மாப்பிள்ளை கிளம்புதல்)

புரோக்கர் : மாப்பிள்ளே. . .!
(மற்றவர்களும் பின் தொடர்தல்.)

காட்சி-2

(இரண்டாவது பெண் வீடு, யாரையும் காணோம். அப்பா, அம்மா, மகன், புரோக்கர் நால்வரும் வருதல்.)

புரோக்கர் : இதுதான் நான் சொன்ன ரெண்டாவது பொண்ணு வீடு.

அம்மா : இந்த பொண்ணாவது அமையணும் (வெளியே கழுதை கத்தும் குரல். . .)

அப்பா : நல்ல சகுணம். கழுதை கத்துது. பொண்ணு அமைஞ்ச மாதிரித்தான்!

மகன் : ஆமா, அந்தக் கழுதைக்குப் பொண்ணு அமைஞ்சிருக்கும். அதுதான் சந்தோஷத்தில கத்துது.

அம்மா : வாயை மூடு. இங்கே யாரையும் காணோமே!

புரோக்கர் : இருங்க, உள்ளே போயிப் பார்த்துட்டு வாரேன். ஐயா. . . (உள்ளே செல்லுதல்)

அப்பா : வேற வீட்டுக்கு மாறி வந்துட்டோமோ? விசேஷ வீட்டில பொம்பளைங்க ஒருத்தரையும் காணோமே. . .

அம்மா : இப்பப் பொம்பளைங்கள எதுக்குத் தேடுறீங்க?

அப்பா : இல்லே. . . உனக்குப் பேச்சுத் துணையா இருக்குமேன்னு. . .

அம்மா : இப்ப நாம பார்க்க வந்திருக்கிற பொண்ணுக்கு அம்மா கிடையாது. ஒரே பொண்ணு தான்!

அப்பா : சரி, சரி. . .
(புரோக்கர் உள்ளேயிருந்து வருதல்)

புரோக்கர் : உள்ளேதான் இருக்காங்க. பொண்ணுக்கு அம்மா இல்லியா, அதான் அப்பாவே பொண்ணுக்கு அலங்காரம் பண்ணிக்கிட்டிருக்கார்.
(பெண்ணின் அப்பா நீளமான கம்பை ஊன்றித் தள்ளாடித் தள்ளாடி நடந்து வருதல்)

பெ.அப்பா: வாங்க, வாங்க. நிற்கிறீங்களே, உட்காருங்க. (தள்ளாடுதல்)

அப்பா : நீங்க விழுந்திடாதீங்க, பார்த்து, மெதுவா. . .

அம்மா : நீங்க பொண்ணக் கூப்பிடுங்க.

பெ.அப்பா: இதோ வந்துட்டேன் (உள்ளே போகிறார்)

மகன் : என்னப்பா, பொண்ணோட அப்பா, கம்பை ஊன்றி நடக்கிறாரு!

அப்பா : அவர் கம்பு, அவர் கை. அவர் ஊன்றி நடக்கிறாரு! அதுக்கென்ன?

அம்மா : நீ பொண்ண மட்டும் பாரு.

புரோக்கர் : தம்பீ! பொண்ணு வருது, பாருங்க. பொண்ணு நல்லா ஆடும்!
(கம்பு ஊன்றி நடந்துவரும் அப்பா அருகில் பொண்ணு சோர்ந்து தள்ளாடி. 'ஆடி, ஆடி' நடந்து வருதல்)

அப்பா : பேஷ்! பேஷ்! ரொம்ப. . . நல்லா இருக்கு!

அம்மா : எது? எது நல்லாருக்கு?

அப்பா : பொண்ணு ஆடுற நாட்டியம்!

அம்மா : அது நாட்டியம் இல்லே. நடைதான் அப்படி இருக்கு.

மகன் : யோவ், புரோக்கரே! பொண்ணு நல்லா ஆடும்னு சொன்னீரே, நடந்தாலே கையும் காலும் உதறி ஆடுதே, இதைத்தான் சொன்னீரா?

புரோக்கர் : இது. . . உங்களைப் பார்த்த பதட்டம்! வேறு ஒன்றுமில்லை.

பெ.அப்பா: ஐயா, புரோக்கர் ஐயா! பொய்யச் சொல்லி ஏமாத்தி என் மகளைக் கட்டிவைக்க முயற்சி பண்ண வேணாம். உள்ளதைச் சொல்லித்தான் கல்யாணம் பேசணும்.

அம்மா : என்ன உள்ளது?

பெ.அப்பா: அதாவது, சம்பந்தியம்மா! எங்க ஊரில எல்லாப் பொண்ணுகளுக்குமே இப்படித்தான் கை, காலு தளர்ச்சியா பலஹீனமா இருக்கும். இல்லேன்னா பல்லு , காவி நிறமா மஞ்சளா இருக்கும். (மகன் வெளியேறுதல்)

அம்மா : இருக்கட்டும், இருக்கட்டும். நாங்க வாரோம். (அப்பா, அம்மா வெளியேற. . .)

புரோக்கர் : யோவ் பெருசு. ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணத்தைப் பண்ணிவைம்பாங்க. நீ ஒரே ஒரு பொய்யை இந்த அமுக்கு அமுக்கி கெடுத்துட்டியே ஐயா நீ எல்லாம். . . (வெளியேறுதல்)

காட்சி - 3

(ஒரு தெரு - அப்பா, அம்மா, மகன் மூவரும் வந்து நின்று கொண்டு)

மகன் : எலுமிச்சம் பழத்தைத் தேய்ச்சு, பொண்ணு பார்க்கிற சமாச்சாரத்தையே தலைமுழுகிடலாம்னா. . . இந்த ஊரில ஒரு கடையிலேயும் எலுமிச்சம் பழமே விற்கிறதில்லையாம். நெல்லிக்கா, ஆரஞ்சு, கீரைங்க, முட்டைகோஸ், பாலு எதுவும் சாப்பிடுற வழக்கம் இந்த ஊருக்கே கிடையாதாம்

அம்மா : அதனால நமக்கு என்னடா?

மகன் : இப்ப நாம பார்த்தோமே பொண்ணுங்க. . . பல்லு காவி ஏறி, இன்னும் கையி, காலு ஆடிக்கிட்டு, சின்ன வயசிலேயே கிழடுதட்டிப் போயி. . . இதுக்கெல்லாம் காரணம் என்னன்னு தெரியுமா உனக்கு?

அப்பா : (தூரத்தில் பார்த்து) ஐ. . அந்தக் கிணத்தைச் சுத்திப் பாரேன். . . தண்ணி இறைச்சுக்கிட்டு எத்தனை பொம்பளைங்க!

அம்மா : சூ! வாயை மூடுங்க.

மகன் : அந்தக் குடிதண்ணில புளோரைடு உப்பு கலந்திருக்கு. அந்த புளோரைடு இந்த ஊர் மக்கள் உடம்பில அளவுக்கு அதிகமாச்

சேர்ந்திருக்கு. அதான் இந்தக் கோளாறு எல்லாம். நான் சொன்ன மாதிரி பாலு, நெல்லிக்கா, கீரை, முட்டைகோஸ், சாப்பிட்டிருந்தா, கொஞ்சம் மட்டுப்பட்டிருக்கும்.

அப்பா : நா, கிணத்துக்கிட்டே போயி, தண்ணி குடிச்சுட்டு வாரேன் (நகருதல்)

அம்மா : (அவரைப் பிடித்து) நில்லுங்க, நீங்க எதுக்குப் போறீங்கன்னு எனக்குத் தெரியும்.

அப்பா : சத்தியமா, தண்ணி குடிக்கத்தான்!

அம்மா : அந்த தண்ணில புளோரைடுன்னு ஒரு உப்பு கலந்திருக்காம். குடிச்சீங்கன்னா, பல்லு காவி ஏறி, கூனு விழுந்து கிழடாப் போயிடுவீங்க.

மகன் : ஆமாப்பா, வேணாம்! இந்த ஊர்ப் பொண்ணும் எனக்கு வேணாம்.

அம்மா : என்னடா இது, பூர்வீக ஊரோட உறவு விட்டுப் போகக்கூடாதுன்னு நீதானடா அடம்பிடிச்சே!

மகன் : ஆமா, அடம்புடிச்சேன். ஊரோட லட்சணம், இப்பத்தானே புரியுது!

அம்மா : சரி, புரோக்கர்கிட்டே சொல்லிட்டுக் கிளம்பலாம். எங்கே அந்த மனுசன்?

அப்பா : அதோ ஓடியாறாரு! (புரோக்கர் ஓடிவருதல்)

புரோக்கர் : மூனாவதா ஒரு பொண்ணையும் பார்க்க ஏற்பாடு பண்ணிட்டேன்.

மகன் : வேணாம்! புளோரைடு கலந்த தண்ணி புழங்குற இந்த ஊரு பொண்ணே எனக்கு வேணாம்.

புரோக்கர் : தம்பீ! நீங்க சொல்றது எனக்குப் புரியுது. கொஞ்சம் தயவு பண்ணி இந்த பொண்ண மட்டும் பாருங்க. முத்தண்ணாவைப் பார்த்த உடனே உங்களுக்குப் புடிச்சுப் போயிடும்.

மகன் : (முகம் சுளித்து) முத்தண்ணாவா? பொண்ணு பேரே சரியில்லியே. அது என்ன முத்தண்ணா?

புரோக்கர் : அய்யய்யோ. . . முத்தண்ணா, பொண்ணு பேரு இல்லே, பொண்ணோட அப்பா பேரு! வாங்க, வாங்க. . . (அனைவரும் நகருதல்)

காட்சி-4

(முத்தண்ணாவின் வீட்டு முன் நால்வரும் நின்று கொண்டு)

புரோக்கர் : இதுதான் முத்தண்ணா வீடு. சுற்றுப்புறத்தைப் பாத்தீங்களா? பக்கத்திலேயே தோட்டம். தக்காளி, பச்சைப்பயறு, கீரைங்க எவ்வளவு விளைய வச்சிருக்காரு பாருங்க. வாசலிலே எலுமிச்சை, நெல்லிக்காய் மரங்கள்! இந்தப்

பக்கம் கறவைப்பசு ரெண்டு, தொழுவம் கழுவி எவ்வளவு சுத்தமா இருக்கு! தோட்டத்தில குழாய்க் கிணறே ரெண்டு இருக்கு! வீடு எப்படி?

அம்மா : வீடு இருக்கட்டும். முதல்ல பொண்ணக் காட்டுங்க?

அப்பா : இல்லே, பொண்ணைப் பெத்த அம்மாவையாவது காட்டுங்க.

புரோக்கர் : அதோ பொண்ணைப் பெத்த அப்பா வரார்! (முத்தண்ணா வருதல்)

முத்தண்ணா: வாங்க, வாங்க. . . எல்லாரும் வாங்க. என்பேரு முத்தண்ணா! எல்லாரும் உள்ளே வாங்க. (அனைவரும் உள்ளே போக முயன்று சில அடிதூரம் நகர்ந்து நின்று கொண்டு)

அப்பா : ஏங்க முத்தண்ணா, வீட்டுக்குள்ளே பொம்பளை யாரையும் காணோம்?

அம்மா : சூ, (மனைவி முறைக்க, நடுங்கி வாய்பொத்துகிறார் அப்பா)

முத்தண்ணா: என் மனைவி மகராசியாப் போய்ச் சேர்ந்திட்டா.

அப்பா : கொடுத்து வைச்ச ஆளு!

முத்தண்ணா: எனக்கு ஒரே பொண்ணு தான். புரோக்கர் திடுதிப்பென்னு வந்து சொன்னாரா, இப்பத்தான்

பொண்ணு உடுப்பு மாத்திக்கிட்டு இருக்கா!
யம்மா, லட்சுமி. . .!

மகள் : (உள்ளேயிருந்து வந்து) இதோ வந்துட்டேன்பா!

முத்தண்ணா: பெரியவங்களை நமஸ்காரம் பண்ணும்மா!
(லட்சுமி விழுந்து கும்பிட்டு எழுதல்)

அம்மா : பொண்ணு மகாலட்சுமியா இருக்கா!

அப்பா : (ரகசியம் பேசும் பாவணையில்) நடந்து வரும் போது நல்லாக் கவனிச்சேன். கை, காலு எதுவும் உதறல்லே!

மகன் : யோவ், புரோக்கரே! பல்லு, பல்லக் காட்டச் சொல்லுய்யா.

புரோக்கர் : அது எப்படீங்க, நீங்க என்ன பல் டாக்டரா? வாத்தியாரு! பல்லக் காட்டுன்னு சொல்றதுக்கு உரிமை இல்லீங்க.

மகன் : இந்தாயா, நான் வாத்தியார் தான். பொண்ண ஆனா, ஆவன்னா சொல்லச் சொல்லு!

புரோக்கர் : இது நியாயம்!

முத்தண்ணா: என்ன மாப்பிள்ளை, என்ன சொல்றாரு?

புரோக்கர் : வேறொண்ணுமில்லேங்க. மாப்பிள்ளைக்குத் தமிழ்மொழி மேல ஒரு பெரிய இது! அதனால

தனக்கு வர பொண்ணு ஆனா, ஆவன்னா சரியாச் சொல்லுமான்னு டெஸ்டு பண்ண நினைக்கிறாரு!

முத்தண்ணா: இவ்வளவு தானே? லட்சுமி, ஆனா, ஆவன்னா சொல்லும்மா!

லட்சுமி : (சரியாக வாயைத் திறக்காமலே, மிக வேகமாக) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ . . .

மகன் : இருங்க, இருங்க! அப்படியில்லே! இப்ப நான் சொல்றேன். அதே மாதிரி நீங்க திருப்பிச் சொல்லுங்க! ஆனா. . .

லட்சுமி : ஆனா. . .

மகன் : (வாயைப் பெரிதாகத் திறந்து) ஆவன்னா. . .

லட்சுமி : ஆவன்னா. . .

அம்மா : கடைவாய்ப் பல்லு காவி நிறமா இல்லே! வெள்ளையாத்தான் இருக்கு!

மகன் : ஈனா. . .

லட்சுமி : ஈனா. . .

மகன் : (பெரிதாக இழுத்து) ஈயன்னா. . .

லட்சுமி : (முன்பற்கள் தெரிய) ஈயன்னா. . .

அப்பா : ஆங். . . முன்னம் பல்லும் காவி இல்லே! வெள்ளைதான்!

அம்மா : போதுண்டா! ஈயன்னா வரைக்கும் போதும், விடு!

புரோக்கர் : ஓக்கேயா? முத்தண்ணா ஐயா, டெஸ்டு ஓ.கே.!

முத்தண்ணா: (சிரித்து) உங்க டெஸ்டு எதுக்குன்னு எனக்குப் புரிஞ்சு போச்சு! புளோரைடு தண்ணியோட பாதிப்பு இருக்கான்னு பார்க்குறீங்க! சரியா?

அம்மா : ரொம்ப சரி!

முத்தண்ணா: நான் முதல்ல ஒரு குழாய்க் கிணறு தோண்டினதும் தண்ணிய டவுன்ல டெஸ்ட் பண்ணுனேன். புளோரைடு இருக்கு குடிக்காதீங்கன்னு சொன்னாங்க. அந்தத் தண்ணிய காய்கறித் தோட்டத்துக்கும், குளிக்கறதுக்கும் பயன்படுத்த வச்சுக்கிட்டு, வேற இடத்தில ரெண்டாவது குழாய்க் கிணறு தோண்டினேன். இந்தத் தண்ணிய டெஸ்ட் பண்ணுனபோது இதில புளோரைடு இல்லே, இதைத்தான் குடிக்கிறோம். இப்படி எதிலும் முன் ஜாக்கிரதையா இருக்கிறது என் வழக்கம்!

அப்பா : அப்படீன்னா, நீங்க வெறும் முத்தண்ணா இல்ல, முன் ஜாக்கிரதை முத்தண்ணா!

புரோக்கர் : அப்புறம் என்ன தம்பி! சம்மதம் தானே?
(மாப்பிள்ளை சிரித்து வெட்கப்படுதல்)
கெட்டிமேளம்! கெட்டிமேளம்!!

(மங்கள வாத்தியம் முழங்குகிறது. . .)

!!!!!!!!!!!!!!!!!!

3. நவீன வேதாளம்

தே.ஞானசூரியபகவான்

காட்சி-1

(பத்து கதாபாத்திரங்கள் வரிசையாக அரங்கினுள் நுழைந்து வட்ட வடிவமாக கைகளைத் தட்டியபடி வலம் வருகின்றனர். இரண்டு சுற்று முடிவுற்றதும் 'நவீன வேதாளம். . . நவீன வேதாளம்' என்று சப்தமாக சொல்லிக் கொண்டு இரண்டு சுற்று வருகின்றனர். நான்கு பாத்திரங்களைத் தவிர மற்ற ஆறு பாத்திரங்கள் வட்ட வடிவமாக அமர்கின்றனர். மூவரில் ஒருவர் மரம்போல கைகளை விரித்தபடி அபிநயித்து அரங்கத்தின் மையப் பகுதியில் நிற்கின்றார். இன்னொருவர் வேதாளம். அவர் மரமாக நிற்பவர் கழுத்தைக் கட்டியபடி நிற்கிறார்.

மற்றொரு கதாபாத்திரம் விக்கிரமாதித்தன் - உருவிய வாளை தலைக்குமேல் உயர்த்தியபடி 'ஸ்டில்'-ஆகி நிற்கிறார். நான்காவது பாத்திரம் சூத்திரதாரி. இப்போது சூத்திரதாரி நாடகத்தை அறிவிக்கிறார்.)

சூ.தாரி : இதனால் சகலவிதமான ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், இன்றைக்கு 'நவீன வேதாளம்' என்னும் நாடகத்தை நாங்கள் நடத்தப் போகின்றோம். அதில் சொற்குற்றம், பொருள் குற்றம் என எக்குற்றம் இருந்தாலும் உங்கள் பிள்ளைகள் போல பாவித்து பொருத்தருளுமாறு உங்கள் பாதக்கமலங்களைத் தொட்டு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கின்றோம்.

/2/

சபையோர்களே, தாய்மார்களே! பெரியோர்களே! மாணவ மணிகளே! குழந்தைகளே!! இப்போது நாடகம் துவங்குகிறது.

(விக்கிரமாதித்தன் உருவிய வாளுடன் வேதாளத்தைப் தேடியபடி வட்டமாக நடக்கிறார்).

சூ.தாரி : ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜகுலதிலக
நபர்-1 : வீராதிவீர வீரமார்த்தாண்ட வீரகுலதிலக
நபர்-2 : சூராதிசூர சூரமார்த்தாண்ட சூரகுலதிலக
நபர்-3 : விக்கிரமாதித்திய மகாராஜா உருவிய வாளுடன்
நபர்-4 : நடுஜாமத்தில் பேய்கள் வாழும் கானகத்தில்
நபர்-5 : வேதாளத்தைத் தேடிச் செல்லுகிறார்
நபர்-6 : வேதாளம் முருங்கை மரத்தில் தலைகீழாக தொங்கிக் கொண்டிருக்கிறது.

(இதுவரை விக்கிரமாதித்தன் காட்டுக்குள் வேதாளத்தைத் தேடியபடி மரத்திற்குமரம் அண்ணாந்து பார்ப்பதுபோல அபிநயித்து சுற்றி வலம்வர வேண்டும்).

சூ.தாரி : இப்போது வேதாளம் இருக்குமிடத்தை விக்கிரமாதித்த மகாராஜா கண்டுபிடித்து விட்டார்.
(விக்கிரமாதித்தன் மரத்தை நோக்கிச் சென்று வாளினால் வெட்டி முருங்கை மரத்திலிருந்து வேதாளத்தை விடுவிக்கிறான். வேதாளம் மரத்தைவிட்டு விக்கிரமாதித்தன் கழுத்தைக் கட்டிக் கொள்ளுகிறது).

/3/

நபர்-1 : விக்கிரமாதித்த மஹாராஜா வேதாளத்தை முருங்கை மரத்திலிருந்து விடுவித்து விட்டார்.

நபர்-2 : வேதாளத்தை தன் முதுகில் சுமந்தபடி செல்லுகிறார் மஹாராஜா.

நபர்-3 : என்னடா இந்த வேதாளம் சிரிக்கவே மாட்டேங்குது.

நபர்-4 : வேதாளம்னா சிரிக்கணும்.

நபர்-5 : வேதாளம்னா வெறுமனே சிரிச்சா பத்தாது. பயங்கரமா சிரிக்கணும்.

நபர்-6 : ஆக்கப் பொறுத்தா, ஆறப் பொறுங்கடா. . . இனிமேதான்டா சிரிக்கும். . .

சூ.தாரி : அற்புறம் சிரிச்சிகிட்டே கதைவேற சொல்லும்மா. . .

நபர்-1 : ஆமா. . . இப்ப பாருங்க. . . சிரிச்சிகிட்டே கதை சொல்லும்பாரு. . .

வேதாளம் : (பயங்கரமாக சிரித்தல்) ஹஹ்ஹா. . . (மற்ற பாத்திரங்களும் உடன் சேர்ந்து சிரிக்கலாம். சிரித்து முடித்ததும்) (ஒரு சுற்று வந்து) பின்னர் வேதாளம் கதை சொல்லுகிறது.

'ஓ. . . விக்கிரமாதித்த மஹாராஜனே. . . நான் உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன் கேள். . . ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக. . . அரசம்பட்டி என்ற ஒரு நாடு இருந்தது. அந்த நாட்டை 'ராஜாதிராஜன்' என்ற அரசன் நீதி தவறாமல் ஆட்சி செய்தான். மாதம் மும்மாரி பெய்தது. கதிர் உழக்கு காண, கட்டு கலம் காண, பயிர் விளைச்சல் கண்டது. மக்கள் பஞ்சம் பசி என்றால் என்னவென்று

தெரியாமலே

வாழ்ந்து வந்தார்கள். அப்படிப்பட்ட காலகட்டத்தில், திடீரென்று அந்த மக்கள் அதிசயமான ஒரு நோயினால் பாதிக்கப்பட்டார்கள். அரசனுக்கு தகவல் வந்தது. அரசன் ஓடோடிச் சென்றான். மக்களிடம் நேரடியாக விசாரித்தான்.

(இப்போது உட்கார்ந்திருக்கும் ஆறு பாத்திரங்கள் மக்களாகவும் சூத்திரதாரி ராஜாவாகவும் அபிநயிக்க வேண்டும். விக்கிரமாதித்தனும், வேதாளமும் ஒரே இடத்தில் ஸ்டில்லாகி நிற்க வேண்டும்).

ராஜா : உங்களுக்கு என்ன கஷ்டம் சொல்லுங்க. உங்க ராஜாகிட்ட மறைக்காமச் சொல்லுங்க.

நபர்-1 : மகாராஜா, எனக்கு இருபது வயசுதாங்க. . . நாப்பது வயசு மாதிரி ஆயிட்டேங்க. எங்கிட்ட இருந்த இளமை போயிட்டதுங்க. முதுமை வந்துட்டதுங்க.

நபர்-2 : மகாராஜா எங்கிட்ட இருந்த சுறுசுறுப்பு போயிட்டதுங்க. சோம்பல் வந்துட்டதுங்க.

நபர்-3 : எங்கிட்ட இருந்த பலம்போயி பலவீனம் வந்துட்டதுங்க.

நபர்-4 : என் நிமிர்ந்த முதுகு, கூன் முதுகாயிட்டதுங்க.

நபர்-5 : குனிஞ்சா நிமிர முடியலைங்க. . .

நபர்-6 : நிமிர்ந்தா குனிய முடியலீங்க. . .

நபர்-1 : கை ஆடுதுங்க, தலை ஆடுதுங்க. . .
நபர்-2 : ஒட்டுமொத்த உடம்பே ஆடுதுங்க. . .
நபர்-3 : எவ்வளவு தண்ணி குடிச்சாலும் தீராத தாகங்க. . .
நபர்-4 : அடங்காத தாகம்ங்க. . .
நபர்-5 : சிறுநீர் கழிக்கக்கூட சிரமம்ங்க. . .
நபர்-6 : அதன் அளவும் குறைஞ்சிபோச்சுங்க. . .

நபர்-1 : சிறுநீர் சிவப்பும் மஞ்சளுமா நிறம்மாறிப்போகுது.
நபர்-2 : அத்தோட முதுகு வலிங்க. . . மூட்டு வலிங்க.. .
நபர்-3 : நோவு நொடின்னு வீட்டுலயே எப்பவும் மொடங்கிக் கெடக்கறம்ங்க. . .
நபர்-4 : அதனால வேலை வெட்டிக்கு போக முடியலீங்க. . .
நபர்-5 : எங்க வீட்டுல அடுப்பு புகையலைங்க.
நபர்-6 : எங்க அடுப்புல பூனையும், எலியும் சந்தோசமா குடும்பம் நடத்துதுங்க. . .

நபர்-1 : எங்க வீட்டுல பஞ்சமும், பசியுமா இருக்குதுங்க. நோயும் நொடியுமா குடும்பமே நடத்த முடியலிங்க. . .

நபர்-2 : மகாராஜா. . . நீங்கதாங்க இந்த நோய் என்ன நோயுன்னு கண்டுபிடிச்சி எங்க கஷ்டத்தைத் தீர்க்கணும். . .
நபர்-3 : எங்க பஞ்சம் பசிய போக்கணும்ங்க. . (ஆறு நபர்களும் ஸ்டில்லாகி நிற்க, மீண்டும் வேதாளம்

பேச ஆரம்பிக்கின்றது).

/6/

வேதாளம் : அரசன் ராஜபிரதானிகளைக் கூட்டினான். ஆலோசித்தான். அரண்மனை மருத்துவர்களை அழைத்து கலந்து பேசினான். மக்களை சோதித்துப் பார்க்கச் சொன்னான். அவர்களில் ஒரு மருத்துவன் நிபுணன். நோய்க்கான காரணத்தைச் சொன்னான். நோய்க்கான தடுப்பு முறைகளையும் சொன்னான். அரசன் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தான். அந்த நோய் மேலும் பரவாமல் தடுத்தான். எதிர்கால சந்ததிகளையும் பாதுகாத்தான்.

ஓ. . . விக்கிரமாதித்திய மகாராஜனே. . . அந்த மக்களை பாதித்தது என்ன நோய்? அந்த நோய் எப்படி வந்தது? அதை எப்படி அரசன் தடுத்தான்?

ஓ. . . விக்கிரமாதித்திய மகாராஜனே. . .! இந்தக் கேள்விக்கு சரியான பதில்களை சொல்லி விட்டால் நான் மீண்டும் என் முருங்கை மரத்திற்கே சென்று விடுவேன். சரியான பதில்களை தெரிந்தும் சொல்லவில்லை என்றால் உன்தலை வெடித்து சுக்குநூறாகி விடும். . . ஜாக்கிரதை. . .

(வேதாளம் பயங்கரமாக சிரித்தல் வேண்டும். ஆறு பாத்திரங்களும் வேதாளம் மாதிரியே சேர்ந்து சிரிக்க வேண்டும்).

விக்கிரமன்: ஓ. . . வேதாளமே. . . அந்த மக்களை பாதித்த அந்த நோய் 'புளோரோசிஸ்'. அந்த மக்கள் குடித்த குடிநீரில் 'புளோரைட்' என்னும் உப்பு அளவுக்கு அதிகமாக இருந்தது. அதனால்தான் அவர்களுக்கு அந்த நோய் வந்தது. அந்த புளோரைடு உப்பினை முறித்து அந்த விஷத் தன்மையை போக்கக்கூடிய உணவுப் பொருட்களை சாப்பிட வேண்டுமென்று மக்களுக்கு உத்தரவு போட்டான் அந்த மன்னன்.

(சூத்திரதாரி அறிவிப்பவனாக மாறி பறை அடித்தபடி அறிவிப்பு செய்தல் வேண்டும்)

சூ.தாரி : இதனால் சகலமான ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், 'புளோரோசிஸ்' நோய் வராமல் தடுக்க, எல்லோரும் உங்கள் உணவில் நிறைய பாலை சேர்த்துக் கொள்ள வேண்டும். கீரை சாப்பிட வேண்டும். நிறைய புளி சேர்த்துக் கொள்ள வேண்டும். தக்காளி, உருளைக்கிழங்கு அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். வைட்டமின் 'சி' சத்து உள்ள நெல்லிக்காய், ஆரஞ்சு, சாத்துக்குடி அதிகமாக சாப்பிட வேண்டும். இது மகாராஜாவின் உத்தரவு. . .

(சூத்திரதாரி ஸ்டில்லாகிறான்)

வேதாளம்: அதுமட்டுமா செய்தான் அந்த புத்திசாலியான மன்னன். 'புளோரைடு' அதிகம் உள்ள பொருட்களை மக்கள் பஸ்ன்படுத்தவே கூடாது என்று சட்டம் போட்டான்.

(சூத்திரதாரி பறை அடித்து அறிவிப்பு செய்தல். ஒவ்வொரு அறிவிப்பிற்கும் ஒருமுறை பறையை அடிக்க வேண்டும்)

சூ.தாரி : இதனால் சகலவிதமான ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், புளோரைடு உப்பு அதிகமாக உள்ள பொருட்களை இனிமேல் யாரும் பயன்படுத்தக்கூடாது. இன்று முதல் யாரும் புளோரைடு கலந்த பற்பசையை உபயோகிக்கக் கூடாது. யாரும் பான்பராக் போடக்கூடாது. இன்று முதல் யாரும் பாக்கு போடக்கூடாது. இன்றுமுதல் யாரும் புகையிலை போடக்கூடாது. இன்றுமுதல் யாரும் பால் கலக்காத வறட்டு டீயை குடிக்கக்கூடாது. இது மகாராஜா உத்தரவு. . .

(சூத்திரதாரி ஸ்டில்லாகிறான்)

விக்கிரமன்: அதுமட்டுமா செய்தான் அந்த மன்னன். . . புளோரைடு உப்பு இல்லாத தண்ணீரை மக்களுக்கு விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்தான்.

சூ.தாரி : இதனால் சகலவிதமான ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால். . . புளோரைடு உப்பு அதிகமாக உள்ள உங்கள் கிணற்றுத் தண்ணீரை குடிக்கக்கூடாது. . . அரசாங்கம் சுத்தம் செய்து தரக்கூடிய புளோரைடு உப்பு இல்லாத தண்ணீரை மட்டுமே குடிக்க வேண்டும். இது சம்பந்தமாக எந்தவிதமான சந்தேகம் ஏற்பட்டாலும் குடிநீர்வடிகால் வாரியத்தை தொடர்பு கொள்ளுங்கள். இது மகாராஜா உத்தரவு. . .

(சூத்திரதாரி ஸ்டில்லாகிறான்)

விக்கிரமன்: ஓ. வேதாளமே! இந்த நோய்க்கு எந்த மருந்தும் கிடையாது என்று தெரிந்து கொண்டான் அரசன். அதனால்தான் அவன் தடுப்பு நடவடிக்கை எடுத்தான். இந்த நோயை அந்த நாட்டை விட்டே விரட்டியடித்தான்.

வேதாளம்: (பயங்கரச் சிரிப்புடன்) ஓ விக்கிரமாதித்த மன்னனே. . . நீ சரியான பதில்களைச் சொல்லி விட்டதால் நான் மீண்டும் என் முருங்கை மரத்திற்கே போகிறேன். . . (பயங்கரச் சிரிப்பு)

(வேதாளம் பறந்து சென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொள்ள நாடகம் நிறைவு பெறுகின்றது).

%%%%%%%%

4. நல்ல காலம் பொறக்குது

(FLOURIDE) - ஞானசூரியன்

அரங்கினுள் ஒன்பதுபேர் வட்ட வடிவமாக நின்று கொண்டிருக்கின்றனர். ஒன்பதுபேரில் முதல் நபர் நாடகத்தின் தலைப்பினை அறிவிக்கின்றார்.

"இதனால் சகலவிதமான ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், இன்றைக்கு - இப்போது "நல்ல காலம் பொறக்குது" என்னும் நாடகத்தினை நாங்கள் நடத்தப் போகின்றோம்.

இதை அறிவித்ததும் மீதமுள்ள எட்டு பாத்திரங்களும் நாடகத்தின் தலைப்பினை சப்தமாக சொல்லுகின்றனர்.

2ம் நபர் : "நல்ல காலம் பொறக்குது"

3ம் நபர் : "நல்ல காலம் பொறக்குது"

4ம் நபர் : "நல்ல காலம் பொறக்குது"

5ம் நபர் : "நல்ல காலம் பொறக்குது"

6ம் நபர் : "நல்ல காலம் பொறக்குது"

7ம் நபர் : "நல்ல காலம் பொறக்குது"

8ம் நபர் : "நல்ல காலம் பொறக்குது"

9ம் நபர் : "நல்ல காலம் பொறக்குது"

முதல் நபர் : "இந்த நாடகத்தில் சொற்குற்றம், பொருள் குற்றம்; எக்குற்றம் இருந்தாலும் பொருத்தருள வேண்டுமாய் உங்கள் பாதாரவிந்த கமலங்களில் விழுந்து - வேண்டி, விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்போது ஒன்பது பாத்திரங்களும் அரங்கில் வட்ட வடிவமாக சுற்றி வருகின்றனர். அதில் முதல் மூன்று நபர்கள் விழுந்தவர்களைப் போல மெல்ல நடந்து செல்லவேண்டும். அடுத்த மூன்று நபர்கள் தலை, கை, கால் உடல் முடுக்க நடுங்கியபடியே செல்ல வேண்டும். கடைசி மூன்றுபேர் ஒரு கையில் ஒரு பாட்டிலை வைத்துக்கொண்டு அடிக்கொருதரம் தண்ணீர் குடித்துக்கொண்டே செல்ல வேண்டும்.

ஒன்பதுபேருமே நடப்பதற்கு சிரமப்படுவது போலவும், சோர்வானவர்கள் போவும் – வயதானவர்கள் போலவும் பார்வையாளர்கள் உணர வேண்டும்.

ஒன்பது பாத்திரங்களும் இரண்டு சுற்று வந்ததும் குடுகுடுப்பைக்காரன் குடுகுடுப்பை அடிப்பதுபோல அபிநயம் செய்தபடி அரங்கினுள் நுழைந்து – பாத்திரங்கள் வட்டத்திற்கு உட்புறமாக – அவர்களுக்கு எதிர்த் திசையில் பாடியபடி வட்டமாக வருகிறான்.

குடுகுடுப்பைக்காரன்

"நல்ல காலம் பொறக்குது
நல்ல காலம் பொறக்குது
அம்மா தாயி...
மாரி மகமாயி..
மணி மந்திர சேகரியே
ஆயி உமையே..
அகிலாண்ட ஈஸ்வரியே..

தேவி ஐக்கம்மா
ராக்கு சொடலை

நீ ஒரு நல்ல வாக்கு சொல்லு...
நீ ஒரு நல்ல சேதி சொல்லு...

மக்களா கேளுங்க மகமாயி வாக்கு இது..
ஜனங்களா கேளுங்க ஐக்கம்மா வாக்கு இது..

இந்த ஊரு நாட்டப்பத்திப் பாத்தேன்
குறையில்ல...
மழை மாரியப் பத்திப் பாத்தேன்
குறையில்ல....
மக்க(ள்) மனுசாளப் பத்திப் பாத்தேன்
குறையில்ல...
மாடு கன்னைப் பத்திப் பாத்தேன்
குறையில்ல...
கோழிகுஞ்சப் பத்திப் பாத்தேன்
குறையில்ல...

சுற்றிவரும் பாத்திரங்கள் நின்று குடுகுடுப்பைக்காரனைப் பார்க்கின்றனர்

முதல் நபர் : ஏய்யா குடுகுடுப்பை.. எந்த மக்க மனுசாளப் பாத்துட்டு கொறையில்லன்னு சொன்னெ?...

2ம் நபர் : அப்பொ நாங்கள்ளாம் மக்க மனுசாள் இல்லையா?

3ம் நபர் : எங்களை நீ பாக்கலியா?

4ம் நபர் : எங்களுக்கு எந்தக் கொறையும் இல்லையா...?

5ம் நபர் : இந்த குடுகுடுப்பைக்கு பார்வை சரியில்லையா?...

6ம் நபர் : அப்படின்னா இவரு டப்சா குடுகுடுப்பை....

7ம் நபர் : டப்சா குடுகுடுப்பை இல்ல கப்சா குடுகுடுப்பை

8ம் நபர் : ஆமா, கப்சா குடுகுடுப்பை

9ம் நபர் : ஆமா, கப்சா குடுகுடுப்பை

இப்போது ஒன்பதுபேரும் கொஞ்சம் சோகமாக, கோரசாக "கப்சா குடுகுடுப்பை".. கப்சா குடுகுடுப்பை" என்று திரும்பத் திரும்ப சொன்னபடி இரண்டுமுறை வலம் வருகின்றனர்.

குடுகுடுப்பை அவர்களை ஆச்சரியமாகப் பார்த்தபடி அரங்கத்தின் மையத்தில் நின்றிருக்கிறான்.

<u>குடுகுடுப்பை</u> : நான் குறையில்லன்னு சொன்னது உங்க மனசுக்கு எந்தக் குறையும் இல்லன்னு சொன்னேன்.. புரியலையா உங்களுக்கு.. அதாவது மனசார எந்தக்குறையும் இல்லாதவங்கன்னு சொன்னேன்.. அது தப்பா.

எல்லாரும் வலம் வருவதைவிட்டு ஒதுங்கி நின்று குடுகுடுப்பையைக் பார்க்கிறார்கள். யோசிப்பதுபோல பாவனை செய்கிறார்கள்...

முதல் நபர் : குடுகுடுப்பைகிட்ட நம்ம கஷ்டத்தை சொல்லுவோம்...

இரண்டாம் நபர் : அவன் ஏதாவது நமக்குப் பரிகாரம் சொன்னாலும் சொல்லுவான்..

மூன்றாம் நபர் : குடுகுடுப்பைக்காரன் சொன்னா அப்படியே பலிக்கும், தெரியுமா?...

நான்காம் நபர் : குடுகுடுப்பை வாக்கும், கோடிப் பொன்னும் சமம்னு எங்க தாத்தா சொல்லுவாரு

ஐந்தாம் நபர் : நாளூருக்கு போயிவர்ற குடுகுடுப்பைக்கு நல்லரு சேதியும் தெரியுமில்ல....

ஆறாம் நபர் : அப்படீன்னா குடுகுடுப்பைகிட்ட நம்ம கஷ்டத்துக்கு பரிகாரம் கேப்போம்.

ஏழாம் நபர் : ஆமா கேட்டாதான் கெடைக்கும்

எட்டாம் நபர் : ஆமா, தட்டினாத்தான் தொறக்கும்

ஒன்பதாம் நபர் : ஆமா, அழுத பிள்ளைதான் பால்குடிக்கும்

குடுகுடுப்பை : ஆளாளுக்கு கஷ்டம், கஷ்டம்னு சொல்றீங்களே தவிர, கஷ்டம் என்னன்னு சொல்ல மாட்டேங்கறீங்களே...

முதல் நபர் : குடுகுடுப்பை என்னை நல்லா பாருங்க.. குனிஞ்சா நிமிர முடியல... நிமிந்தா குனிய முடியல.. கூன் விழுந்து போச்சி பாருங்க...

2ம் நபர் : குடுகுடுப்பை என்னை பாருங்க.. 20 வயசுல 40 வயசு மாதிரி ஆயிட்டோம் பாருங்க...

3ம் நபர் : இள வயலிலேயே வயசான மாதிரி ஆயிட்டோம் பாருங்க...

4ம் நபர் : எங்களப் பாருங்க.. உடம்பூரா எப்பிடி நடுங்குது பாருங்க..

5ம் நபர் : ஒரு சுறுசுறுப்பே இல்லாம சோம்பேறி மாதிரி ஆயிட்டோம் பாருங்க...

6ம் நபர் : ஒரு வேலை வெட்டிக்கு போகமுடியாம, வெட்டி ஆளா ஆயிட்டோம் பாருங்க... குடும்பத்துக்கு வருமானம் இல்லாம பொண்டாட்டி, புள்ளங்க.. பட்டினி கெடக்குதுங்க...

7ம் நபர் : எங்களப் பாருங்க.. "அகோரப்பசி" அகோர தாகம்.. அடிக்கடி(அரைலிட்டர் தண்ணீ குடிச்சிட்டு கெடக்கிறோம்...

8ம் நபர் : சிறுநீரே சரியா ... போகமாட்டதுங்க...

9ம் நபர் : அப்பிடியே போனாலும்.. மஞ்சளாவும், சிவப்பாவும் போவுதுங்க...

முதல் நபர் : இப்பொ சொல்லுங்க.. எங்க கஷ்டத்துக்கு என்ன காரணம்?

இரண்டாம் நபர் : எங்களுக்கு என்ன நோய்?...

மூன்றாம் நபர் : இதுக்கு என்ன பரிகாரம்?...

குடுகுடுப்பை : குனிஞ்ச தலை நிமிரமுடியாம
நிமிர்ந்த தலையை குனிய முடியாம
நிராதரவா நிக்கற – இந்த
பாவப்பட்ட மக்களுக்கு –
பக்குவமான ஒரு வழியச் சொல்லுதாயி....

தலை நடுங்கி..
கழுத்து நடுங்கி...
கழுத்தோட தலைநடுங்கி...

கை நடுங்கி – கால் நடுங்கி
கையோடு கால் நடுங்கி
கஷ்டப்பட்டு நிக்கற – இந்த ஜனங்க
கவலைதீர ஒரு வழி சொல்லு தாயி.....

அடங்காத தாகத்தோட
அடிக்கடி தண்ணீர் குடிக்கிற – இந்த
அதிசயமான நோய்க்கு – இவங்க
அகப்பட்டது எப்படின்னு சொல்லு தாயி...

மக்களா கேளுங்க மகமாயி வாக்குஇது
ஜனங்களா கேளுங்க ஜக்கம்மா வாக்கு இது

பாடலைப் பாடியபடி குடுகுடுப்பை வளையமாகச் சுற்றி வருகிறார். ஒன்பது பாத்திரங்களும் கவனமாகக் கேட்டபடி நின்று கொண்டிருக்கின்றனர்.

குடுகுடுப்பை : அய்யாமாருங்களே.. அன்னைமார்களே.. வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டுப் போகும்.. எல்லாரும் வாய்விட்டு நல்லா ஜோரா சிரிங்க பாக்கலாம்....

4ம் நபர் : ரொம்ப சுலபமான வைத்தியம்
வாய்விட்டு சிரிச்சா நோய்விட்டு போகுமாம்...
எல்லாரும் சிரிங்க... எல்லாரும் சிரிங்க...

ஒன்பது பாத்திரங்களும் பல்தெரியுமாறு சப்தமாக சிரிக்கின்றனர்
குடுகுடுப்பை வட்டமாகச் சென்று எல்லோருடைய பல்லையும்
கவனிக்கிறான்...

குடுகுடுப்பை : போதும் சிரிச்சது.. போதும்...
சிரிச்சது போதும்.. நிறுத்துங்க...

எல்லோரும் சிரிப்பை நிறுத்துகின்றனர்

குடுகுடுப்பை : இப்பொ ஒவ்வொருத்தரும் பக்கத்துல இருக்கிறவங்களோட
பல்லு என்ன நிறமா இருக்குன்னு பாத்து சொல்லுங்க பாப்போம்....

எல்லோரும் ஒருவர் பல்லை ஒருவர் காட்டும்படி பார்க்கின்றனர்....

5ம் நபர் : இவம் பல்லு காவிநிற கோடு போட்டமாதிரி இருக்கு...

6ம் நபர் : இவம் பல்லிலேயும் காவிநிற கோடு போட்ட மாதிரியே இருக்கு...

7ம் நபர் : இவம் பல்லும் அதே மாதிரிதான் இருக்கு

8ம் நபர் : அய்யய்யோ.. எல்லார் பல்லும் காவிநிற கோடுபோட்ட
மாதிரிதான் இருக்கு...

9ம் நபர் : ஆமாம், எல்லார் பல்லும் ஒரே மாதிரிதான் இருக்கு...

குடுகுடுப்பை : நீங்க... குடிக்கற தண்ணியில கூடுதலான புளோரைட் உப்புகூடி
இருக்குதுன்னு ஆத்தா சொல்லுது சாமி..
உங்க முதுகு வலிக்கும்..
மூட்டு வலிக்கும்....
அடங்காத தாகத்துக்கும்...
ஆடற உடம்புக்கும்
அத்தனைக்கும் - அதிகமான புளோரைடுதான்
காரணம்னு கருத்தமாரி சொல்லுது...

முதல் நபர் : நாங்க குடிக்கற தண்ணியில என்ன உப்பு இருக்குன்னு சொன்னீங்க?

குடுகுடுப்பை : புளோரைடு உப்பு

2ம் நபர் : அது என்னா, நம்ம சாப்பாட்டு உப்பு மாதிரிங்களா? . . .

குடுகுடுப்பை : ஆமா . . அது ஒரு ரசாயன உப்பு . . . .

3ம் நபர் : புளோரைடு உப்பு எல்லா தண்ணியிலயும் இருக்கும்களா? . . .

குடுகுடுப்பை : ஆமா, குறிப்பா கிணத்துத் தண்ணியில இருக்கும் . . .

4ம் நபர் : அப்படீன்னா இந்த நோவு எதுக்குங்க, எங்க ஊருக்காரங்களுக்கு மட்டும் வருதுங்க? . . .

குடுகுடுப்பை : உங்க ஊர் தண்ணியிலதான் இந்த புளோரைட் உப்பு அதிகமா இருக்கு.

5ம் நபர் : அப்பொ . . இந்த புளோரைட்ட உப்பு தண்ணியில அதிகமா இருந்தா இந்தநோவு வரும்ங்களா? . . . .

குடுகுடுப்பை : ஆமா . . அளவுக்கு மீறினால் அமுதமும் விஷம்

5ம் நபர் : இந்த நோவுக்கு ஏதாவது ஒரு பேரு உண்டுங்களா? . . .

குடுகுடுப்பை : "புளோரோசிஸ்" இந்த நோய்தான் உங்களுக்கு வந்திருக்கு . . . எங்க சொல்லுங்க பாக்கலாம் "புளோரோசிஸ்"

7ம் நபர் : "புளோரோசிஸ்" சரிங்களா? . . . .

8ம் நபர் : "புளோரோசிஸ்" சரியா வாயில நுழைய மாட்டேங்குது . . . ஆனா, சுலபமா ஒடம்புல நுழைஞ்சிடுதுங்க . . .

எல்லோரும் ஆளுக்கொருமுறை "புளோரோசிஸ்" என்று சொல்லிப் பார்க்கிறார்கள்.

9ம் நபர் : அதுசரி, குடுகுடுப்பை. டாக்டர்கூட டிகிரி வச்சி பாத்துத்தான் என்ன நோவுன்னு சொல்றாரு . . அது எப்படி சிரிக்கறத வச்சி என்ன நோவுன்னு கண்டுபிடிச்ச . . . .

முதல்நபர் : அதான் காவிநிறமா எல்லார் பல்லுலயும் கோடு போட்டிருக்கு இல்ல . . .

குடுகுடுப்பை : ஆமா, அவர் சொல்றது சரிதான். இந்த நோயோட முதல் அறிகுறிதான்.. இந்த காவிநிற கோடுதான்.. இது ஆறு வயசுலேயே வந்துடும்.. அந்தக் கோடு பெரிய வயசு வரைக்கும் அப்படியேதான் இருக்கும்.

2ம் நபர் : இந்த முதுகு வலி, மூட்டுவலி, நடுக்கம் — அடங்காத தாகம் இதெல்லாம்....

குடுகுடுப்பை : நோய் முத்திப்போனா இதெல்லாம் வரும்.. ஆறு வயசுக்கு முடிய இந்த அறிகுறிங்க வரும்...

3ம் நபர் : குடுகுடுப்பை. இதை குணப்படுத்த ஏதாவது வழி இருக்கா?

குடுகுடுப்பை : குணப்படுத்த வழியில்ல..
ஆனா, அதிகமாகாம கட்டுப்படுத்தலாம்
வராமத் தடுக்கலாம்....
அதுக்கு வழி இருக்கு ....

4ம் நபர் : இந்தநோய் அதிகமாகாம கட்டுப்படுத்துறது எப்படி?
வராமத் தடுக்கறது எப்படி?

குடுகுடுப்பை : புளோரைட் அதிகமா இருக்கற பொருட்களை பயன்படுத்தக்கூடாது.

9ம் நபர் : புளோரைட் எதுல அதிகமா இருக்கு?

குடுகுடுப்பை : பான்பராக்குல இருக்கு.

முதல் நபர் : டேய் கேட்டுக்க.. இனிமே பான்பராக் போடாதடா...

குடுகுடுப்பை : பால் சேக்காத டீ-யிலயும் இருக்கு

2ம் நபர் : டேய் ஒனக்குந்தான்... வறட்டு டீ குடிக்காத...

குடுகுடுப்பை : அப்புறம், பாக்கு போடக்கூடாது.

3ம் நபர் : டேய் கேட்டுக்கடா.... பாக்கு போடாத....

குடுகுடுப்பை : புகையிலை போடக்கூடாது...

4ம் நபர் : டேய் ஒனக்குந்தான். இனிமே புகையிலை போடாத....

குடுகுடுப்பை : அதேமாதிரி புளோரைடை கட்டுப்படுத்தற சில உணவுப் பொருட்கள் இருக்கு . . .

5ம் நபர் : அது என்னன்னு சொல்லுங்க . . .

குடுகுடுப்பை : உணவுல நிறைய பால் சேத்துக்கணும்

6ம் நபர் : நாளைக்கே சீமைக் கறவையை வாங்கி வீட்டுல கட்டிடறேன் . . .

குடுகுடுப்பை : கீரை நிறைய சாப்பிடணும் .

7ம் நபர் : வீட்டுத் தோட்டத்துலேயே ஒரு கீரைப்பாத்திய போட்டுடறேன் . . .

குடுகுடுப்பை : புளியை அதிகமா சேத்துக்கணும்

8ம் நபர் : இனிமே எங்க வீட்டுல மூணு வேளையும் புளி சோறுதான் .

குடுகுடுப்பை : நெல்லிக்காய் அதிகமா சாப்பிடணும் . . அதுல வைட்டமின் 'சி' இருக்கு . வைட்டமின் 'சி' புளோரைடை குறைக்கும் . . அப்பொறம் தக்காளி, உருளைக்கிழங்கு இதெல்லாம்கூட உணவுல சேத்துக்கணும் .

9ம் நபர் : எங்க வீட்டு மரத்துல கொத்து கொத்தா காச்சிருக்கு . நெல்லிக்காய் . . ஊறுகாய் போட்டுடறேன் . . . .
இனிமே ஆனைக்கும் - தக்காளி - உருளைக்கிழங்குதான்

குடுகுடுப்பை : அப்புறம் புளோரைட் அதிகமா இருந்தா அதை சுத்தம் செஞ்சி குடிக்கணும்

முதல் நபர் : அது எப்படி குடுகுடுப்பை . . .

குடுகுடுப்பை : ஒரு லிட்டர் தண்ணிக்கு ஒரு மில்லிகிராம் படிகாரத்தைப் போட்டு பத்து நிமிஷம் கலக்கணும் . அப்பொறம் ஒருமணி நேரம் கழிச்சி வடிகட்டி குடிக்கணும் . . ஆனா, இதை நாமே செய்யக் கூடாது - குடிநீர் வடிகால் வாரியத்துல சொல்லி அவுங்க உதவியோட செய்யணும் .

2ம் நபர் : ரொம்ப சுலபமா இருக்கே . . எப்படி அது? . . .

3ம் நபர் : ஒரு லிட்டர் தண்ணிக்கு

4ம் நபர் : ஒரு மில்லிகிராம் படிகாரத்தைப் போட்டு

5ம் நபர் : 10 நிமிஷம் நல்லா கலக்கணும்

6ம் நபர் : அப்படியே ஒருமணி நேரம் விட்டுடணும்

7ம் நபர் : அப்பொறம் வடிகட்டி குடிக்கணும்

8ம் நபர் : இதை நாம செய்யக்கூடாது. குடிநீர் வடிகால் வாரியத்துக்கு சொல்லி - அவங்க உதவியோட செய்யணும்

9ம் நபர் : குடுகுடுப்பை நல்லா ஜோரா சத்தமா சிரி, பாக்கலாம்.

குடுகுடுப்பை : என்னது சிரிக்கணுமா?

முதல் நபர் : குடுகுடுப்பை .. ஒனக்கு புளோரோசிஸ் இருக்கான்னு நாங்க பாக்க வேணாமா?

குடுகுடுப்பை சிரிக்க - எல்லோரும் சிரிக்கின்றனர்.

குடுகுடுப்பை : நான் சொன்ன சேதி எல்லாம்
கருத்தா கேட்டு, கவனமா கடைபிடிச்சா
கஷ்டம் தரக்கூடிய - இந்த
புளோரோசிஸ் கண்டிப்பா வராது
கலக்கம் வேணாம்...
கவலை வேணாம் ...
காரியம் ஜெயம்து...
கருத்தமாரி சொல்லுது...
நான் வரேன் சாமி ....

பாடிக்கொண்டே குடுகுடுப்பைக்காரன் வெளியேற.. ஒன்பது பாத்திரங்களும் - அவன் பின்னால் வரிசையாகச் செல்லுகின்றனர்.

* * * * * * *